THURKA STA… CHUNNAKAM

Registered as a Newspaper

A/L 88 வர்த்தகம், கலை
சனி – ஞாயிறு
8.00 - Logic - Mr. விக்கி
9.00 - Commerce - Mr. மணி
10.00 - Economics - Mr. தர்மா
11.00 - Accounts - Mr. செளந்தி
12.00 - Hindu Cul. - Miss. கணேசமூர்த்தி
ஆரம்பம்: 14-4-1986
Bond Institution
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

உதயன்

விலை ரூ 1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

A L 88 விஞ்ஞானம்
சனி — ஞாயிறு
9.30 - Physics - Mr. நந்தகுமார்
10.30 - Chemistry -Mr. மகாதேவா
11.30 - Zoology - Mr. k. சிவபாதம்
11.30 - App. Maths- Mr. அன்ரனி
12 30 - Pure Maths- Mr. அன்ரனி
12.30 - Botany - Mr. செல்வநேசன்
2.00 - Chemistry-Mr. V.T.K.
Bond Institution
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ௵ சித்திரை ௴ 7 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ஷஃபா பிறை 10 (20 04-1986) UTHAYAN ■ A LIVELY TAMIL DAILY கதிர்:130

அரசாங்கமும் தமிழர்களும் சிவில் யுத்தத்தை நோக்கி

தீர்வில் நாட்டம் இல்லை; உலகப் பிரசித்தி பெற்ற 'சயன்ஸ் மொனிட்டர்' தகவல்

சென்னை, ஏப்ரல் 20

இலங்கை அரசாங்கத்தினரும், சிறுபான்மையினரான தமிழரும் முழுஅளவிலான சிவில் யுத்தம் ஒன்றை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றனர்

இனப் பிரச்சினைக்குச் சமாதானத்தீர்வு ஒன்று ஏற்படும் அறிகுறி எதுவும் இல்லை. அதில் இருசாராருக்கும் நாட்டம் இருப்பதாகவும் தெரியவில்லை

இவ்வாறு உலகப் பிரசித்திபெற்ற 'கிறிஸ்டியன் சயன்ஸ் மொனிட்டர்'' தனது பிந்திய இதழில் கருத்து வெளியிட்டுள்ளது

விவியன் பெஞரியோ என்பவர் 'கிறிஸ்டியன் சயன்ஸ் மொனிட்டர்' சஞ்சிகைக்கு எழுதிய செய்தியில் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கத்தையும் செய்தியாளர் விவியன் பெஞரியோ பேட்டி கண்டு எழுதியிருக்கிறார்.

அந்தப் பேட்டியும் இச்சஞ்சிகையில் வெளியாகியுள்ளது.

இந்தியா, இலங்கையில் இராணுவ ரீதியில் தலையிடாது என்பது எமக்குத் தெரியும்.

இந்தியா எமக்கு ஆயுத உதவியை வழங்கக்கூடும் அல்லது ஆயுதங்களைப் பெறுவதற்காக வழிவகைகளைச் செய்துதரலாம்.

இலங்கைஅரசின் ஆயுத பலத்துக்கு மேலாக இராணுவரீதியில் பலப்படுத்திக்கொள்ள தமிழருக்கு இந்திய உதவி தேவைப்படுகிறது. இப்படி திரு பாலசிங்கம் சொன்னதாக கிறிஸ்டியன் சயன்ஸ் மொனிட்டர்' செய்தி வெளியிட்டுள்ளது.



யாழ்ப்பாணத்தில் ஊர் காவல் படை அமைக்க யோசிக்கினமாம்! ஆள் கிடைக்க வேணுமே!!

பொலீஸ் சீருடைகள் அபகரிப்பு

கொழும்பு, ஏப் 20 மட்டக்களப்பில் உள்ள ஒரு லோண்டரியில் இருந்து 40 ஜோடி பொலீஸ் சீருடைகளை இனந்தெரியாத கோஷ்டி ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை பகல் அபகரித்துச் சென்றது

இந்த லோண்டரி, மட்டக்களப்பு அரசடி வீதியில் உள்ளது

ஹராரேயில் அணிசேரா நாடுகள் மாநாடு

புதுடில்லி, ஏப் 19 அணிசேரா நாடுகளின் அடுத்த உச்சி மாநாடு செப்டம்பர் முதலாம் திகதி சிம்பாப்வேயின் தலைநகரான ஹராரேயில் நடைபெறும்.

கண்ணிவெடியை அடுத்து

முதலிக் குளத்தில் நேற்று மோதல்

திருகோணமலை, ஏப் 20 முதலிக்குளத்தில் ஆயுதப்படையினருக்கும் போராளிகளுக்கும் இடையே நேற்று மோதல் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிலக்கண்ணிவெடித் தாக்குதலைத் தொடர்ந்து நேற்றுஹெலிக்கொப்டர், விமானங்கள் அப்பகுதியில் தாழப்பறந்து சரமாரியாகத் தாக்குதல் நடத்தின.

போராளிகளும் திருப்பிச் சுட்டனர் என்றும் கூறப்படுகிறது

மேலதிக விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் ஊர்காவல்படை திட்டம் சாத்தியமா?

கொழும்பு, ஏப்ரல் 20 யாழ் குடாநாட்டிலும் ஊர்காவல் படைத் திட்டத்தைச் செயற்படுத்த முடியுமா?

இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் ஆலோசிக்கின்றன என்று நம்பகமாகத் தெரிகிறது.

வடபகுதியில் உள்ள பிரஜைகள் குழுக்களின் ஒத்துழைப்பை இத்திட்டத்தைச் செயற்படுத்தப் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றியும் பாதுகாப்பு வட்டாரங்கள் சிந்தித்து வருவதாக கூறப்படுகின்றது.

324 ஆசிரியர் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம்

பெயர் விவரம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 20 வெளி மாவட்டங்களில் 6 வருடங்கள் சேவை செய்த 324 ஆசிரியர்கள் மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் யாழ் மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்

கல்விச் சேவை ஆணைக் குழு இடமாற்ற உத்தரவுகளை வழங்கியுள்ளது.

யாழ் மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ள ஆசிரியர்களின் பெயர்கள் வருமாறு;

கே. கணேசு -நாவலப்பிட்டி செல்வி ஜே- எஸ். செபஸ்தியாம்பிள்ளை- நாவலப்பிட்டி, செல்வி. ஆர். செல்லப்பா- கண்டி பி. தியாகராசா - கண்டி செல்வி சிவஞானவள்ளி மடுக்கலை.

திருமதி. வி. சுப்பிரமணியம் - பம்பலப்பிட்டி செல்வி. ஐ. தாமோதரம்பிள்ளை - நுகேகொட, திருமதி. எம். பாலதேவன் - கொழும்பு, திருமதி. ஏ. இம்மானுவல் கம்மாதுவை, எஸ். தங்கராசா, இரத்தினபுரி.

திருமதி எஸ். கண்மணி - இரத்தினபுரி, கே. கபரோகணர் - ஹொரவப்பொத்தானை, கே. கார்த்திகேசு - பதுளை, திருமதி. கே. அப்பாத்துரை - பதுளை, செல்வி. என். சந்திரமலர் - பதுளை.

கே. அரியதாஸ் - பதுளை, திருமதி. எம். இராமநாதபிள்ளை - ஹட்டன், இ. கணபதிப்பிள்ளை - அப்கொட், திருமதி. ஜி. கணபதிப்பிள்ளை - அப்கொட், கே. இராஜேந்திரன்- பொகவந்தலாவ.

பி. சபாரத்தினம்- நுவரெலியா, ரி. சிவசுப்பிரமணியம் - பொகவந்தலாவ, செல்வி. கே. நாகேஸ்வரி - பட்டன, ஜே. விஸ்வநாதபிள்ளை- தலவாக்கலை, திருமதி. ஏ சுப்பிரமணியம்- ஹட்டன்.

ஆர். தர்மகுலசிங்கம் முருங்கன், செல்வி. எஸ். பத்மகாந்தி - மன்னார், திருமதி, பி. துரைராசா மன்னார், சகோதரி மேரி திரேசத்ரா, மடு, கே ஆர். டேவிட் - நிலா

(4 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை அரசாங்கம்

மாகாணசபை அதிகாரங்களை விரும்பியநேரம் ரத்துச்செய்யலாம்

புதிய யோசனைகள் குறித்து ஏ. எப். பி. அறிக்கை

புதுடில்லி ஏப். 19 புதிய யோசனைகளில் தெரிவிக்கப்பட்ட மாகாணசபைக்கான அதிகாரங்களை, இலங்கை அரசாங்கம் வேண்டிய நேரத்தில் ரத்துச்செய்ய முடியும்.

[இது சம்பந்தமான overriding powers] காரணம் காட்டாமல் தள்ளிவிடும் அதிகாரத்தை தன்னிடம் அரசு வைத்துக் கொண்டுள்ளது

இப்படி புதுடில்லியில் இருந்து அனுப்பப்பட்ட ஏ எப் பி. செய்தி விதாபன அறிக்கை ஒன்று கூறுகிறது.

இந்த அடிப்படையிலான புதிய யோசனை 25 லட்சம் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்ய முடியாது என்றும் அந்த அறிக்கை கூறுகிறது

புதிய யோசனைகளை இந்திய அரசு அதிகாரிகள் ஊன்றிப் படிக்கத் தொடங்கியுள்ளனர் இதுசம்பந்தமான கால வரையறை ஒன்றும் நிர்ணயிக்கப்படவில்லை.

புதிய யோசனைபற்றி ஆராய்ந்தபின்னர் தமிழ் அமைப்புக்களின் கருத்துக்களை இந்தியா அறிந்துகொள்ளும்.

அதன் பின்னர்தான் புதிய யோசனை பற்றிய முடிவை இந்தியா, இலங்கைக்கு அறிவிக்கும்

இப்படி ஏ, எப். பி. அறிக்கை கூறியது.

பஹத் தலைமையில் லிபியா செல்லும் குழு

புதுடில்லி, ஏப்ரல்19 அமெரிக்க தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கும் லிபியாவுக்கு முழு ஆதரவு தெரிவிப்பதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் பலிராம் பஹத் தலைமையிலான தூதுக்கோஷ்டி ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை லிபியா பயணமாகிறது.

லிபியத் தலைவர் கேணல் கடாபியை இத்தூதுகோஷ்டி சந்திக்கும்.

கட்டை பறிச்சானில்

சூட்டுக் காயங்களுடன் மூன்று தமிழர் சடலங்கள்

திருகோணமலை, ஏப் 20 துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மூன்று தமிழரின் சடலங்கள் நேற்றுக் காலை மூதூர்த் தொகுதியில் கட்டைப் பறிச்சான் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்டன.

இம் மூவரில் இரண்டு பேர் பெண்கள்;

1. சுப்பிரமணியம் ராஜலட்சுமி
2. இராஜதுரை சரோஜாதேவி
3. கந்தையா கனகசுந்தரம்

மூதூர் பதில் நீதிவான் ஜனப. அப்துல் ஹமீத் சடலங்கள் கிடந்த இடத்துக்குச் சென்று பார்வை இட்டார். பிரேத பரிசோதனைக்குப் பின்னர் உத்தரவிட்டார். மரணவிசாரணை நாளை திங்கள் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சடலங்கள் நாவலடிச் சந்தியில் கிடக்கக் காணப்பட்டன.

சில தினங்களுக்கு முன்னர் இச்சந்தியில் புதைக்கப்பட்டு இருந்த நிலக் கண்ணி வெடியை சிப்பாய்கள் தகவல் கிடைத்து வந்து அகற்றிச் சென்றிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் 55,000 அகதிகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

ஏறக்குறைய 55,000தமிழ் அகதிகள் யாழ்ப்பாணக் குடா நாட்டில் உள்ளனர். இவர்களில் 5,000 குடும்பங்கள் முகாம்களில் தங்கியுள்ளன.

11,000 குடும்பங்கள் முகாம்களுக்கு வெளியே வசித்து வருகின்றன

1983 ஆகஸ்டில் இருந்து 1986 பெப்ரவரி மாதம் வரை யாழ் குடாநாடு வந்து சேர்ந்த தமிழ் அகதிகளே இவர்கள்.

இத்தகவல் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் முன்னேற்ற அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்நகரில் நள்ளிரவு நடந்த ஷெல் தாக்குதல்

ஹோட்டல், கடைகள் சேதம்

நல்லூர், ஏப்ரல் 20 இரவு நேரத்தில் சிப்பாய்கள் வெளியே வர முயற்சித்தனர். இதனைத் தொடர்ந்து போராளிகள் குண்டுகளை வெடிக்க வைத்தனர். இதனை அடுத்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இச்சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு யாழ்நகரில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

வெள்ளி இரவு 11மணி அளவில் சிப்பாய்கள் யாழ் கோட்டை முகாமை விட்டு வெளியே வர முயற்சித்தனர்.

இதனைக் கண்ட போராளிகள் கைக்குண்டுகளை வெடிக்க வைத்து துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர்

இதன் பின்பு முகாமிற்கு திரும்பிய சிப்பாய்கள் நகரின் மீது ஷெல் தாக்குதல் நடத்தினர்.

இதனால் மூன்று கடைகளும் ஒரு ஹோட்டலும் சேதமடைந்தன.

நகரில் பரவலாக ''ஷெல்'' குண்டுகள் வெடித்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

'ஷெல்' வெடிப்பினால் சேதமடைந்த கடைகள், ஹோட்டல்கள் விவரம் வருமாறு:

அமுதசுரபி ஹோட்டலின் பின் பக்கம் ஷெல் குண்டினால் சேதமடைந்தது.

ஹோட்டலின் ஓடுகள் சிதறுகள், கண்ணாடிகள் உடைந்து நொருங்கின.

சோபிகா ஹோட்டலின் மேல்மாடி ஷெல் தாக்குதலில் சேதம் அடைந்தது நள்ளிரவு 12 மணி அளவில் ஷெல் விழுந்து வெடித்தது

ஹோட்டல் அசோக் மீதும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் குசினியும் ''பார்'' பகுதியும் குளிரூட்டிப் பெட்டிகளும் பலத்த சேதமடைந்தன.

சுமார் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டமேற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இச்சம்பவங்களில் நகரில் நள்ளிரவு பதற்றம் நிலவியது. சேதமடைந்த கடைகளையும் ஹோட்டலையும் யாழ் அரச அதிபர் பார்வையிட்டார்.

மரியாதைக் குண்டுகளுடன் இறுதிக் கிரியை

சாவகச்சேரி, ஏப் 20 நாவற்குழியில் இராணுவத்தினருடன் மோதிய போது கொல்லப்பட்ட 23 வயது இளைஞரான ஜெரிக்கு அஞ்சலி செலுத்துமுகமாக சாவகச்சேரியில் வெள்ளிக்கிழமை துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

கிராம்புவில்இல்லத்தில் இருந்து வீதிகள் வாழை, தோரணங்களாலும் கறுப்புக்கொடிகளினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு சாவகச்சேரிச் சந்தையில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் எடுத்துச் செல்லப்பட்டது.

41 மரியாதைக் குண்டுகள் தீர்க்கப்பட்டதைத் தொடர்ந்து இறுதிக் கிரியைகள் நடந்தேறின.

மற்றும் ஒரு சிப்பாய் மரணம்

திருகோணமலை, ஏப். 20 முதலிக்குளம் நிலக் கண்ணி வெடித்தாக்குதலில் காயமடைந்த 2 விமானப்படைச் சிப்பாய்களில் ஒருவர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் நேற்றுக் காலமானார்.

இவருடன் 9 சிப்பாய்கள் அத்தாக்குதலில் கொல்லப்பட்டனர் ஒருவர் சிவிலியன் ஆகும்.

கிழக்கில் சம்பவம்

கிரனேட் வீச்சில் சப் இன்ஸ்பெக்டர் பலி

மட்டக்களப்பு, ஏப் 20 ஆயுதப்படை முகாமிலிருந்து நோயாளி ஒருவரை வைத்தியசாலைக்குக் கொண்டுசென்ற ஜீப்மீது போராளிகளால் கிரனேட் வீசப்பட்டது. சப்இன்ஸ்பெக்டர் ஒருவர் அதே இடத்தில் பலியானார்.

இச்சம்பவம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 5-30 மணியளவில் பொத்துவில் - பாணமை வீதி, சாந்தி தியேட்டருக்கு அருகில் நடந்தது.

பொத்துவில் அதிரடிப் படை முகாமில் கடமையாற்றும் ராகமை வாசியான கே. டி. எச். ரோகண (20 வயது) என்னும் சப்இன்ஸ்பெக்டர்தான் பலியானவராவார்.

இவரது மரண விசாரணை கல்லடி அதிரடிப் படை முகாமில் நகர மரணவிசாரணை அதிகாரி திரு த. சிவநாதன் முன்னிலையில் நடைபெற்றது

உதவிப் பொலீஸ் அதிபர் திரு. நிகால் கருணாரத்ன சாட்சியமளித்தார்.

பிரேதபரிசோதனையை பதில் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ரோகினி மூத்ததம்பி மேற்கொண்டார்.

விசாரணை முடிவில் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க, அன்றையதினம் நண்பகல் 12 மணியளவில் மட்டக்களப்பு—கல்முனை வீதி பாண்டிருப்பு என்னுமிடத்தில் அதிரடிப் படை ஜீப் ஒன்று மின் கம்பத்துடன் மோதியது.

இவ்விபத்தில் களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாம் சிப்பாய் ஒருவர் படுகாயமுற்றார். இவர் ஆபத்தான நிலையில் அம்பாறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

வடக்கின் மேதின கொண்டாட்ட ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 20 தொழிற்சங்கங்களும் வெகுஜன அமைப்புகளும் இணைந்து வடபகுதியின் ஐக்கிய மேதினத்தை நடத்த உள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள லங்கா தொழிற்சங்கங்களின் சம்மேளன அலுவலகத்தில் திரு. எஸ். விஜயானந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இதுபற்றி முடிவு செய்யப்பட்டது.

மேதினத்தன்று இணுவில் கந்தசுவாமி கோயிலடியில் இருந்து காலை 11 மணிக்கு ஊர்வலம் புறப்பட்டுச் சுன்னாகம் சந்தை மைதானத்தை அடையும். சந்தை மைதானத்தில் பொதுக் கூட்டம் நடத்தப்படும்.

இத்தினத்தை அரசடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குக் குரல் கொடுக்கும் தினமாகவும் அனுஷ்டிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மீனவருக்கு உணவுமுத்திரை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20 மன்னாரில் கடல் வலய சட்டத்தால் பாதிக்கப்பட்ட மீனவருக்குஅடுத்த வாரத்திலிருந்து ரூபா 210 பெறுமதியான உணவு முத்திரைகள் வழங்கப்படும்.

சுபநேரம்

20--4--1986
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9 02 முதல் 10.32 வரை
ராகுகாலம்:
4 32 முதல் 6 02 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஏகாதசி விரதம்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயக்கை பகுதி பொதுசனச் சந்தை புனரமைக்கப்படுகிறது

பருத்தித்துறை, ஏப் 20 யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை புலோலி உப அலுவலக எல்லைக்குட்பட்ட மாயக்கைப் பகுதியில் ஏற்கனவே ஒரு சிறு பொதுசனச் சந்தை இயங்கி வந்தது.

இது அண்மையில் பருத்தித்துறையில் ஏற்பட்ட நெருக்கடி நிலை காரணமாக புனரமைக்கப்பட்டு வருகிறது.

இச் சந்தையில் தம்பசெட்டி, அல்வாய், மாயக்கை, வாணக்குடியிருப்புப் பகுதிகளிலுள்ள விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த வாய்ப்பாக இருக்கும்.

இச் சந்தைக் கட்டடம் இப்பகுதி இளைஞர்களால் சிரமதான அடிப்படையில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

இப் பொதுசனச் சந்தை இம்மாத முடிவிற்குள் பொதுமக்களுக்கெனத் திறந்து வைக்கப்படவுள்ளதென புலோலி உப-அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. பெ. கனகசபாபதி தெரிவித்தார்.

திருக்குறள் மனனபோட்டி

மானிப்பாய், ஏப். 20 நவாலி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் தின பேச்சுப் போட்டி, திருக்குறள் மனனப் போட்டிகளில் பரிசு பெற்றோர் விவரம் வருமாறு:-

திருக்குறள் மனனப் போட்டி:-

ஆண்டு 4-ம. தாமரை, வி. விஜிதா, க. தபானந்தினி

ஆண்டு 5 ப. யசவினி இ. உஷாபினி, வே. சுகந்தினி

ஆண்டு 6 செ. இராசசெல்வி, இ சஜீவி, கு. குஞ்ஞளினி

ஆண்டு 7 ச. சதானந்தன், ஆ. ரஞ்சினி, இ. கவிதா

ஆண்டு 8 க. மதிவதனா க. கிரிஜா, நா. வத்சலா

ஆண்டு 9 ச. சதானந்தினி, ஆ. தர்சினி, சி. றனிதா

ஆண்டு 10 க. கிரிதரன் நா. பிரபாகரன், சி. பரமேஸ்வரன்

ஆண்டு 11 செ. பஞ்சரட்ணம், க யோகேஸ்வரி, க. டெய்சியா

திருவள்ளுவர் பேச்சுப் போட்டி:

ஆண்டு 4 வி. விஜிதா, பா. விஜேபா, க கதர்சினி

ஆண்டு 5 பே. சுகந்தினி. ஆ. கேசவானந்தமூர்த்தி, ம. யாழினி

ஆண்டு 6 இ. சஜீவி, கு. குஞ்ஞளினி, செ. இராசசெல்வி

ஆண்டு 7 ம. நித்தியானந்தன், க. சுதாகரன், ஆ. யோகானந்தன்

ஆண்டு 8 ச. மதிவதனா கு. குணானந், செ. சிவகுமார், செ.சுதானந்தன்

ஆண்டு 9 ச. சதானந்தினி, இ. தர்சினி, அ. அருள்வாணி

ஆண்டு 10 க. கிரிதரன் இ. ஸ்ரீபிரேமினி.

ஆண்டு 11 சி. ஜெகதீஸ்வரி, க. யோகேஸ்வரி இ. மகாதேவா

இராணுவ ரீதியிலான அணுகுமுறையை கைவிடுங்கள்

அரசியல் தீர்வுக்கு ஜனாதிபதியிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப் 20 இராணுவ அணுகுமுறையைக் கைவிடுங்கள். அரசியல் தீர்வு ஒன்றைக் காணுங்கள் அதேநேரத்தில் தமிழர் பகுதிகளில் இருந்து பாதுகாப்புப் படைகளை விலக்கிக் கொள்ளுங்கள்.

இப்படி வல்வெட்டித்துறை பிரசைகள் குழு, ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிய கடிதத்தில் கோரியுள்ளது.

கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது;

உங்கள் கூட்டுத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிறில் ரணதுங்காவின் அண்மையிலான அறிக்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ அணுகுமுறையைத்தான் உங்கள் அரசு விரும்புகிறது என்பதை தெரியப்படுத்துகிறது.

தமிழ்ப் பகுதிகளில் இராணுவ அணுகுமுறையை எடுக்க அரசு விரும்புவது தெரிகிறது. கூட்டுத்தளபதியின் கூற்றுப்படி இராணுவ நடவடிக்கையினால் குடிமக்கள் பாதிக்கப்படுவர்.

ஆயுதபடை முகாம்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது என்ற போர்வையில் அப்பாவித் தமிழர் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை நடத்த முயற்சி எடுக்கப்படுகின்றன என்பதை நாம் ஏப்ரல் 7இல் எழுதிய கடிதத்தை இங்கு ஞாபகப்படுத்துகிறோம்.

இப்படி வல்வெட்டித்துறை பிரசைகள் குழு ஜனாதிபதிக்குக் கூறியுள்ளது.

மல்லாகம் இளைஞர் கழக ஆண்டுக் கூட்டம்

மல்லாகம், ஏப்ரல் 20 மல்லாகம் இளைஞர் கழக ஆண்டுப் பொதுக்கூட்டம், கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

திரு. பெ அருள்சோதி தலைமை வகித்தார்.

வலி வடக்கு அபிவிருத்தி அதிகாரி திரு வே. ஏ. கனகேந்திரம் பேசுகையில்,

கிராமத்தில் உள்ள மூலப்பொருள்களைப் பாவித்து உற்பத்தி செய்யும் அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும்.'' - என்று சொன்னார்.

தந்தையை நினைத்து வேதனைப்படும் நடிகை டிஸ்கோ சாந்தி

பழம் பெரும் நடிகர் ஆனந்தனின் மகள்தான் டிஸ்கோ சாந்தி. கவர்ச்சி நடன நடிகைகளின் வரிசையில் இவரும் இடம் பெற்று விட்டார்.

அவர் சொல்கிறார் ''நான் பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும்போது படிப்பில், விளையாட்டில், நடனமாடுவதில், நாடகத்தில் நடிப்பதிலும் கூட நான்தான் முதல் மாணவி.

பத்தாம் வகுப்பு வரையில் படித்தேன். எல்லா வகுப்புகளிலும், தலைவி நான்தான். 'விஜயபுரி வீரன்' ஆனந்தன் மகள் என்பதால் எல்லோரும் என்னிடம் பழகினார்கள்.

எனக்குத் தொடர்ந்து பாராட்டுக் கிடைத்துக்கொண்டே இருந்ததால் எதிலுமே ஒரு தன் நம்பிக்கையோடு செயற்பட்டு வருகிறேன்.

என்னுடைய தந்தை நான்கு கார் வைத்திருந்தார் ஆரம்ப வாழ்க்கை நடத்தினார் என்று எல்லாம் என் தாயார் கூறுவார்கள்.

ஆனால் நான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது அந்தச் செளகரியங்கள் எதுவுமே இல்லை.

என் தந்தை நடிகராக புகழ் பெற்று, சம்பாதித்தபணத்தை எல்லாம் 'நாட்டைக் காக்கும் கை' என்ற படத்தை தனது நண்பர்களை நம்பி எடுத்து, வீட்டையே காக்க முடியாத நிலைக்கு வந்திருந்தார்.

அவருக்கு இருந்த புகழையும், அதன் பிறகு அவருக்கு ஏற்பட்ட வீழ்ச்சியையும் எண்ணிப் பார்த்தால் வேதனையாக இருக்கும்.

எனக்கு ஒரு அக்காவும் அண்ணனும் இரண்டு தம்பியும் இரண்டு தங்கைகளும் இருக்கிறார்கள். அக்காவுக்கு திருமணமாகி விட்டது.

எனவே நானாவது தலையெடுத்து, குடும்பத்தைப் பழையபடி முன்னுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற ஒரு வேகம் எப்போதும் எனக்குள் இருந்து கொண்டே இருந்தது.

அதன் விளைவே எனது சினிமாப் பிரவேசம்'' என்றார்.

தினசரி சினிமா

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

பலராலும் ஏற்கப்படும் அளவுக்கு உயர்ந்த டானியலின் படைப்புகள்

60-ஆவது ஆண்டுபூர்த்தி விழாவில் புகழாரம்

பலாலி, ஏப்ரல்20

ஒரு எழுத்தாளனின் படைப்புக்கள்கூட பரிணாமவளர்ச்சிபெற்று பிற்காலத்தில் பலராலும் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு உயர்ந்து விடுவதனை டானியலின் இறுதிக்கால எழுத்துக்களிலே நாம் காண்கின்றோம்.

திரு டானியலின் எழுத்தும் வளர்ச்சி பெற்று, அவரின் எழுத்தினை வாசிப்பவர்களும் கருத்தியல் ரீதியான வளர்ச்சிபெற்று, ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளும் — அங்கீகரிக்கும்—அளவில் பிற்காலத்தில் படைப்புக்கள் உயர்ந்து நிற்கின்றன.

இவ்வாறு அமரர் கே டானியல் அவர்களது இல்லத்தில் கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் ஏற்பாட்டில் நடைபெற்ற கே. டானியலின் அறுபதாவது ஆண்டு பூர்த்தி விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு. இ சிவகுருநாதன் அவர்கள் சொன்னார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றியதிருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்,

அமரர் டானியலை ஒரு எழுத்தாளனாக மட்டும் நான் காணவில்லை; ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஆயுதம் ஏந்திய போராளியாக மட்டும் நான் காணவில்லை; ஏற்றுக்கொண்ட தனது அரசியல் சித்தாந்தத்தினைக் காணத்துடிப்பவனாக மட்டும் நான் அவரை இனம் காணவில்லை; மொழியியல் ரீதியாக யாழ்ப்பாணத்தில் வழக்கொழிந்து செல்லும் சொற்களின் களஞ்சியமாகவும் நான் திரு. டானியலைக் காண்கின்றேன்.

அவரது நாவல்களிலும், கதைகளிலும் வரும் யாழ்ப்பாணத்துச் சொற்களையும், பழக்க வழக்கங்களையும் கருவாக வைத்து ஜப்பானியப் பேராசிரியர் ஒருவர் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வில் ஈடுபட்டிருப்பது இதற்குச் சான்றாகின்றது — என்று கூறினார்.

கலாநிதி சோ.கிருஷ்ணராஜா, திரு சோமகாந்தன், செங்கைஆழியான், திரு. சபாரத்தினம், ஆகியோரும் உரையாற்றினர்.

'ஈழமுரசு' ஆசிரியரும், கலை இலக்கியப் பத்திரிகை நண்பர்கள் — செயலாளருமான திரு. எஸ் திருச்செல்வம் நன்றியுரை கூறினார்.

இன்று முழுவதும் மின் விநியோகம் இல்லை

நல்லூர், ஏப். 20

யாழ் பிரதேச மின் பொறியியலாளரின் கண்காணிப்புக்கு உட்பட்ட யாழ்ப்பாணம், சுன்னாகம், காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, வேலணை ஆகிய பகுதிகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை மின்சார விநியோகம் தடைப்படும் என யாழ் பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்,

அநுராதபுரத்திலிருந்து வரும் கே. வி மின்மார்க்கத்தில் திருத்தவேலை நடக்க இருப்பதே இதற்குக் காரணம் இன்று காலை 6 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் மின்சார விநியோகம் தடைப்படும்

இதேபோல் கிளிநொச்சிப் பிரதேச மின் பொறியியலாளரின் கண்காணிப்புக்கு உட்பட சகலபிரதேசங்களிலும் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 30 மணி வரையும் மாலை 4.30 மணியிலிருந்து 5 மணி வரையும் மின் தடை ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருக்குளிர்த்தி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20 அரியாலை ஆனந்தன் வடலி வீதியிலுள்ள ஞான வைரவர் கோவிலில் நாளை (21-04-86) சகஸ்ர சங்காபிஷேகமும், 22இல் திருக்குளிர்த்தி அபிஷேகமும் நடைபெறும்.

லிபியத் தாக்குதல்: "புளொட்" கண்டனம்

சென்னை, ஏப்ரல், 19 லிபியாவில்அமெரிக்கா நடத்திய தாக்குதலை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டித்து அறிக்கை ஒன்றைவிடுத்திருக்கிறது

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

1986 – 04 – 14 ஆம் திகதியன்று லிபியா மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்திய காட்டுமிராண்டித்தனமான விமானத்தாக்குதலை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

சமாதானத்தையும் நல்வாழ்வையும் நாடி தமிழீழம் போன்ற 3-ம் உலக நாடுகளில் உள்ள மக்கள் நடத்துகின்ற போராட்டங்களை சர்வதேச அரங்கில் அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் சகபாடிகளும் பயங்கரவாதம் என வலிந்து பிரசாரம் செய்து வந்துள்ளன

இப்பிரசாரத்தை வலுப்படுத்துவதன் மூலமே அமெரிக்கா தனது ஆக்கிரமிப்பு யுத்தங்கள், அட்டகாசங்களை நீதியின் சார்பில் செய்யப்பட்டவையாக தன்னுட்டு மக்களுக்கும் ஏனைய தன்னைச் சார்ந்துள்ள முதலாளித்துவ நாட்டு மக்களுக்கும் நியாயப்படுத்த முயற்சிக்கின்றது.

லிபியக் குடியரசின் தலைவர் கடாபியை ஒரு பயங்கரவாதியாகவும், லிபியா ஒரு சர்வதேச பயங்கரவாத மையங்களைப் பேணும் நாடாகவும் சித்திரிக்கின்றது.

இத் தாக்குதலிற்கான, ஒரு முன்னுரையே அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் அடிவருடிகளும்.

உலகில் நிகழும் நியாயமான மக்கள் போராட்டங்களை பயங்கரவாதம் என கூறுவதன் பின்னணியில் இது போன்ற மிலேச்சத்தனமான ஆக்கிரமிப்புச் செயல்களே உள்ளடக்கமாக உள்ளன.

லிபிய மக்களுக்கும் தம் உரிமைகளுக்காகப் போராடும் அனைத்து மக்களுக்கும் சமாதானத்திற்கும் ஒரு பெரும் மிரட்டலான இத்தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டமும் ஏகாதிபத்திய எதிர்ப்பு முனைப்பினைக் கூர்மைப்படுத்திச் செயற்பட வேண்டிய அவசியத்தை இச்சம்பவம் உணர்த்துகின்றது.

எம்முடைய நியாயமான போராட்டத்தையும் பயங்கரவாதம் என முத்திரை குத்துவதன் மூலம் அமெரிக்க, இஸ்ரவேலிய பயங்கரவாதிகளின் நீசத்தனமான பிரசாரத்திற்கும் செயல்களுக்கும் துணை போவதன் மூலம் சிறிலங்கா அரசு இஸ்லாமிய மக்களுக்கும் அரபு நாடுகளுக்கும் எதிரான நிலைப்பாட்டைத் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளது; என்பதும் குறிப்பிடத்தக்கதே.

ரெசோவும் கண்டனம்

சென்னை, ஏப். 19 லிபியா மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடத்திய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அரச பயங்கரவாதச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இப்படி தமிழீழ மாணவர் பேரவை (ரெசோ) அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:–

வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் உள்ள பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட மனித நேயமற்ற, நாகரிகத்திற்குப் புறம்பான இச்செயல் மூன்றாம் உலக நாடுகளின் ஆக்கிரமிப்பும் அமெரிக்காவின் நீண்ட பட்டியலில் மேலும் ஓர் நடவடிக்கையாகும்.

பாலஸ்தீன மக்கள் மீது சியோனிச பயங்கரவாதிகளால் நாள்தோறும் கட்டவிழ்த்து விடும் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையும் சேர்ந்து அரபிய மக்களின் நலன்களைச் சிதைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்றே இதனை நாம் கருதுகின்றோம்.

உலக சமாதானத்தை விரும்பும் லிபிய மக்கள் மீது நடத்திய இத்தாக்குதலை நாம் மீண்டும், மீண்டும் கண்டிப்பதுடன் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

LANKA CEMENT LIMITED
KANKESANTHURAI.

முருங்கன் களிமண்ணுக்குச் சமமான களிமண் யாழ். மாவட்டத்தினுள் தேடி எடுத்து லங்கா சிமெந்து லிமிட்டெட்டுக்கு விநியோகித்தல்:

எமது விரிவான ஆய்வின் பயனாக யாழ்ப்பாண மாவட்டத்தில் முருங்கன் களிமண்ணுக்குச் சமமான களிமண் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. எனவே மேற்படி களிமண்ணை எமக்கு விநியோகிக்க ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர்கள் கீழ்க்கண்டவாறு எம்மைத் தொடர்புகொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டிக்கொள்ளுகிறோம்.

1. ஒப்பந்தக்காரர்கள் தாங்கள் களிமண் எடுக்கும் பிரதேசத்தினைக் காட்டும் ஒரு சாதாரண வரைபடம் (Location Drawing) ஒன்றை அமைத்துக் கீழ்க்காணும் கேள்விப்பத்திரத்துடன் அனுப்பவேண்டும்.
2. வரைபடத்தில் காட்டப்பட்ட பிரதேசத்தில் எடுக்கப்பட்ட ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிலோ நிறையுடைய 3 களிமண் மாதிரிகள் பெயர், சுயவிலாசமிட்டு எடுக்கப்பட்ட பிரதேசத்தின் பெயர் கேள்வுப்பத்திர இலக்கமான LCL¦SU¦T\01\86 குறித்து அரக்கு முத்திரையிட்டு 25-04-1986 காலை 10.30 மணிக்கு முன் கேள்வுப்பத்திரத்துடன் 'உதவிப் பொது முகாமையாளர்' காரியாலயத்தில் சேர்ப்பிக்கவும்.
3. ஒப்பந்தக்காரர்கள் வெவ்வேறு எத்தனைப் பிரதேசங்களிலும் இருந்து களிமண்ணை விநியோகிக்கலாம். ஆனால் களிமண் எடுக்கப்படும் ஒவ்வொரு பிரதேசத்தினதும் சாதாரண வரைபடத்துடன் (Location Drawing) ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிலோ நிறையுடைய 3 களிமண் மாதிரிகள் ஒவ்வோர் பிரதேசத்தில் இருந்தும் பெறப்பட்டு மேற்குறிப்பிட்டபடி பிரதேசத்தின் பெயர், ஒப்பந்தக்காரரின் பெயர், சுயவிலாசம், கேள்வுப்பத்திர இலக்கம் என்பன எழுதப்பட்டு, கேள்வுப்பத்திர முடிவு நாளாகிய 25-4-86 காலை 10 30 மணிக்கு முன் எமது உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயத்தில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்
4. (i) மேற்படி களிமண்ணை எடுக்கப்படும் பிரதேசத்தில் விநியோகிப்பதற்கான 1 தொன்னுக்கான விலைக்கூறு.
   (ii) மேற்படி களிமண்ணை அப்பிரதேசத்திலிருந்து ஏற்றி எமது தொழிற்சாலைக்குக் கொண்டுவந்து எமது களிமண்சாலையில் இறக்குதல் தொன் ஒன்றுக்கான விலைக்கூறு.
   (iii) நாள் ஒன்றுக்கு விநியோகிக்கக்கூடிய மிகக் குறைந்த தொகை களிமண்—தொன்னில்.

மேற்படி விலைக்கூறுகளைத் தங்களால் தயாரிக்கப்பட்ட 2 பிரதிகள் கொண்ட படிவங்களில் தயாரித்து அரக்கு முத்திரை இடப்பட்ட 9"X4" அளவுகொண்ட உறையில் இட்டு "உதவிப் பொது முகாமையாளர்", லங்கா சிமெந்து லிமிட்டெட், காங்கேசன்துறை என்ற விலாசமிட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வுப்பத்திர இலக்கமான LCL. SU¦T¦01/86 எழுதி 25-04-1986 காலை 10.30 மணிக்கு முன் உதவிப் பொது முகாமையாளர் காரியாலயத்தில் உள்ள கேள்வுப்பத்திரப் பெட்டியில் சேர்ப்பிக்கவும். மேற்படி கேள்வுப்பத்திரங்கள் கேள்வுப்பத்திர முடிவு நேரமாகிய 10.30 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும்.

மேற்படி விடயமாக மேலும் தகவல்களைப் பெற விரும்புவோர் விநியோக அதிகாரியை அவரது காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் சந்திக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பொது முகாமையாளர்,
லங்கா சிமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

09-04-1986.

உங்கள் தேவையே எங்கள் சேவை!

உங்கள் பணத்தை மிச்சப்படுத்துங்கள் !!

ரொப்பலர் நிறுவனத்தின் விற்பனைப் பிரிவு விநியோகப் பெண்கள் உங்கள் வீட்டுப் பாவனைப் பொருட்களான உணவு, மருந்து வகைகள், அழகுசாதனப் பொருட்களான சுத்திகரிப்புப் பொருட்கள் முதலியவைகளை உங்கள் வீட்டுப் படிகளிலேயே நகரத்திலும் பார்க்கக் குறைந்த விலையில் விநியோகம் செய்கின்றார்கள்.

மலர்ந்த முகத்துடன் உங்கள் வீட்டுக்கு வரும் எமது பிரதிநிதிகளை வரவேற்று உற்சாகப்படுத்துங்கள். அவர்களிடம் பொருட்களை வாங்குவதால் போக்குவரத்துச் செலவுகள், இராணுவ கெடுபிடிகள், உடல் சலிப்பு முதலியவற்றிற்கு ஆளாகாமல் வீட்டில் உள்ளபடியே மிகுதிப்படுத்த முடியும். உங்கள் தேவைகளை எமது பிரதிநிதிகளிடம் அறியத்தாருங்கள் நாம் சிறந்த முறையில் அவற்றை விநியோகம் செய்யமுடியும்.

வாடிக்கையாளர்களே
எமது நிறுவனத்தின் அதிபர்.

ரொப்பலர் இன்ரநஷனல்
இல.95, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ஜேர்மனியிலுள்ள கணவருடன் இணைய விரும்பும் பெண்களுக்கு

நீங்களும் உங்கள் பிள்ளைகளும்
வசதியாகவும் நம்பிக்கையுடனும்
ஜேர்மனி சென்றடைய எல்லா ஒழுங்குகளும்
உடனடியாகச் செய்து தருவோம்.

எங்கள் ஏனைய சேவைகள்

- ✶ பல்வேறு உலக நாடுகளுக்கும் துரிதமான பிரயாண ஒழுங்குகள்.
- ✶ சலுகைக் கட்டணங்களில் விமானச் சீட்டுக்கள்.
- ✶ Confirmations, Reconfirmations, Cancellations
- ✶ விசா, பாஸ்போட், பாஸ்போட் புதுப்பித்தல், பொன்ட் செய்தல்.
- ✶ இந்தியப் பிரயாணம்:

உறுதிசெய்யப்பட்ட ஆசனப் பதிவுகள், விமான நிலையம் சென்று ஆசனமின்றி ஏமாறுவதை முன்கூட்டியே தவிர்த்துக் கொள்ளுங்கள்.

நாலு பேருக்கு மேல் ஓரே நேரத்தில் பயணம் செய்யும்போது எமது பிரதிநிதியும் உடன் சென்று விமான நிலையத்தில் வேண்டிய உதவி பிரதிநிதியும் உடன் சென்று விமான நிலையத்தில் வேண்டிய உதவி களைச் செய்துகொடுப்பர். அத்துடன் விமான நிலையம் செல்வதற்கு இலவச பிரயாண ஒழுங்கும் செய்யப்படும்.

MACK TRAVELS
இல. 8, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Tele: 24791
24414 (Res.)

dynads

உதய சங்கற்பம்

சொன்ன சொல்லைக் காப்பாற்றுபவனே மனிதர்களுள் சிறந்தவன் தன் நம்பிக்கையோடு முயற்சி செய். வெற்றி உனதேயாகும்.

-ஜேம்ஸ் அலன்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல. 15, 2வது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
20-04-86
தொலைபேசி: 24805
22073
த. பெ. 28

புதிய "புலுமாசு"!

இலங்கைத் தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை இறுதிக் கட்டத்திற்கு வந்து விட்டதாக இந்தியா கருதுகிறது இது பற்றிய செய்தியை வாசகர்கள் உதயனில் படித்திருப்பார்கள்.

அதே கருத்தை அமைச்சர் தொண்டமான் தொடக்கம் பத்திரிகையாளர் மேர்வின் டி சில்வா வரை வெளியிட்டிருக்கிறார்கள்.

அந்த இறுதிக் கட்டத்தில் இலங்கை அரசாங்கம் சமர்ப்பித்த புதிய யோசனை சிரிப்புக்கு இடமானது. அது வெறும் "புலுமாசா"கிப் போய்விட்டது

மாவட்ட சபையைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்த அரசாங்கம் ஒரு வட்டம் தாண்டி மாகாண சபைக்கு வந்திருக்கிறது. அவ்வளவு தான்! அதுவும் வெறும் பெயர் மாற்றமேயன்றி வேறு எதுவும் இல்லை!!

அதிகாரத்தைப் பரவலாக்குவதாகவும், தமிழ் மக்களுக்கு ஒருவித சுயாட்சி வழங்குவதாகவும் புதிய யோசனை இருக்கும் என்று நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் வாஷிங்டனில் வைத்து வெளுத்து வாங்கினார்.

ஆனால் அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீது மூலம் கையளிக்கப்பட்ட புதிய யோசனை வெற்றுத் தகரம் என்பது தெரிந்து விட்டது.

அதிகாரப் பரவலாக்கலுக்கு சமஷ்டி, சுயாட்சி என்று எத்தனையோ நல்ல அரசியல் வழிகள் எல்லாம் இருக்கின்றன ஆனால் இலங்கை அரசாங்கம் போயும் போயும் யூனியன் பிரதேச முறையைத் தெரிவு செய்திருக்கிறது.

தமிழ் மக்கள் தமது சொந்த அலுவல்களைத் தாமே சுயமாகநிர்ணயித்து தாமே நிர்வகித்து வாழ்வதற்கு வசதி தேவை.

ஆனால் யூனியன் முறை, நாணயக் கயிற்றை மத்திய அரசுக்கு கொடுத்ததற்கு ஒப்பான முறை அதற்கும் ஏற்கனவே வந்த மாவட்ட சபைக்கும் அவ்வளவு வித்தியாசம் இல்லை.

ஒற்றையாட்சிக்கு உட்பட்டுக் கொடுக்கக் கூடியதைத் தமிழருக்கு வழங்குவோம் என்ற அரசாங்கத்தின் விடாப்பிடிக் கருத்தையே புதிய 'புலுமாசு'ம் வலியுறுத்துகிறது. வெறும் வார்த்தை ஜாலங்களால் — வாசக மாற்றங்களால் தமிழ் மக்களை இனியும் சிங்கள அரசுகள் ஏமாற்ற முடியாது.

1958 ஆம் ஆண்டில் காலஞ்சென்ற எஸ். டபிள்யு ஆர். டி. வழங்க முன்வந்த பிரதேச சுயாட்சியைத் தானும் 28 வருடங்களின் பின்னர் புதிய யோசனை தெரிவிக்கவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் இறுதிக் கட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனை இப்படியா இருக்க வேண்டும்?

அவ்வாறான தீர்வை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறதா? தமிழர்கள் அந்த அளவுக்கு விஷயம் தெரியாதவர்கள் என்ற நினைப்பா?

தமிழர் பிரச்சினையை நியாயமான முறையில், நீதியான வழியில் தீர்த்து வைக்க சிங்கள அரசுக்கு விருப்பமில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. யு என். பி. அரசாங்கத்தின் அரசியல் கஞ்சத்தனம் மீண்டும் நிருபிக்கப்பட்டு விட்டது.

சிங்களவர் ஓர் இனம். அதே போலத் தமிழரும் ஓர் இனம். சிங்களவர் தங்களைத் தாங்களே ஆள்வது போல, தமிழ் மக்களும் தம்மைத் தாமே ஆள்வதற்கு விரும்புவது நியாயமான ஆசை.

தமிழன் ஆண்ட இனம். தன்னைத் தானே ஆளவேண்டும் என்று விரும்புவதை எவரும் தப்பான — தவறான அபிலாஷை என்று நினைக்க முடியாது; நினைக்கவும் கூடாது.

சிங்களவரும், தமிழரும் தம்மைத் தாமே ஆள்வதால் ஒருவர் மற்றவருக்குத் தீங்கு செய்தது ஆகாது வாழு, வாழ விடு என்ற நடைமுறைக் கொள்கை எல்லோருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டும்.

இந்த உண்மையைப் புரிந்தால் மட்டும் போதாது. புரிந்ததாக நடித்துக் கொள்வதாலும் நடக்கப் போவது எதுவுமில்லை இதயசுத்தி தான் பிரதானமானது

அந்த நிலைமை வளரும் வரைக்கும் சிங்கள அரசுகளால் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவே முடியாது. அது நிச்சயம்.

சிங்கள அரசுகள் தம் வழி நடக்க நினைத்தால், தமிழர் தலைவர்களும் தம் வழி நடப்பதைத் தவிர வேறு மார்க்கம் இருக்க முடியுமா?

அதனால் நாட்டுக்குத் தான் நஷ்டம் பகைமையும், குரோதமும் வளர்ந்து இரு தரப்பு மக்களும் வீணே இறந்தொழிவது தான் இறுதி முடிவாக இருக்கும்.

சைவப் புலவர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 20

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர் ஆகிய இரு பகுதிகளுக்கும் பரீட்சார்த்திகள் தோற்றுவர்.

தளபாட சேகரிப்பு

வட்டுக்கோட்டை, ஏப் 20

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் தளபாடங்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கத்தின் பணிப்புக்கிணங்க வட்டாரக் கல்வி அதிகாரிகள், அதிபர்கள் மூலம் இந்த விவரங்களைச் சேகரித்து வருகின்றனர்.

லிபியாமீது அமெரிக்கா மீண்டும் தாக்குதல்

பதற்றமடைய வேண்டாமென மக்களுக்கு கடாபி வேண்டுகோள்

ஸ்டான்புல், ஏப்; 19

அமெரிக்கா லிபியா மீது தாக்குதல் நடவடிக்கைகளை மீண்டும் மேற்கொண்டுள்ளது.

அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல்களால் திரிப்போலியை அடுத்துள்ள நகர மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிச்செல்ல முயன்றதாக மேலும் கூறப்படுகிறது

நகரின் பெரும் பகுதி தாக்குதலை அடுத்து இருளுக்குள் மறைக்கப்பட்டது

தாக்குதலுக்காக விமானங்கள் வந்தபோது தரையிலிருந்து ஏவுகணைத் தாக்குதல்களை தாம் மேற்கொண்டதாகவும் இதைத் தொடர்ந்து விமானங்கள் பின்வாங்கிச் சென்றுவிட்டதாகவும் லிபியா தெரிவித்துள்ளது

லிபியாமீதான அமெரிக்க தாக்குதலை அடுத்து இரண்டாவது முறையாக கேர்ணல் கடாபி வானொலியில் தோன்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

மக்களைப் பதற்றம் அடைய வேண்டாம் எனவும் நகரப் பகுதியிலிருந்து அவர்களை இடம் பெயர்ந்து செல்ல வேண்டாமென அவர் கேட்டுக் கொண்டதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே அமெரிக்க லிபிய மோதலை முடிவுக்குக் கொண்டுவர துருக்கியிடம் கேர்ணல் கடாபி உதவி கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் கஸ்பார் வெயின் பேர்கர் லிபியாவின் அமெரிக்க நிலை பற்றி கருத்து தெரிவித்துள்ளார்.

இப்போதைய அமெரிக்க லிபிய தாக்குதல் விவகாரம் ராஜதந்திர ரீதியில் சிக்கலை உருவாக்கியுள்ளது

எனினும் அமெரிக்கா தனது நிலையில் உறுதியாகவே இருக்கிறது

ஐரோப்பிய பொருளாதார சமூகமும் லிபியாவுக்கு எதிராக பொருளாதார வர்த்தகத் தடைகளை விதிக்க தீர்மானித்துள்ளது.

இவ்வாறு வெயின் பேர்கர் தமது கருத்துக்களில் குறிப்பிட்டுள்ளார்.

கோடையில் ஒரு சிறு மழை: அமெரிக்காவுடன் பேச லிபியா தயார்

புதுடில்லி, ஏப்ரல் 19

அமெரிக்காவுடன் நிபந்தனையற்ற பேச்சுக்களை நடத்த லிபியா தயார்.

ஐ நாவிற்கான லிபியத் தூதுவர் அலி டிருக்கி அமெரிக்க செய்தி ஒலிபரப்பு ஒன்றில் பேசுகையில் இதனை அறிவித்தார்.

பயங்கரவாதம் என்றால் என்ன என்பது பற்றி பொதுவான ஓர் உடன்பாடு ஏற்பட்டால் அமெரிக்காவுடன் ஒத்துழைக்க திரிப்போலி தயார் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை லிபியா மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல் எந்த விதத்திலும் நியாயமற்றது, கண்டிக்கத்தக்கது என்றும் அவர் தெரிவித்தார்.

வெளி உலகில்

இஸ்ரவேல் ஆட்சியின் 'கண்டம்' நீங்கியது

அமைச்சரவை மாற்றங்களால் பிரச்சினை சரிப்படுத்தப்பட்டது

ஜெருசலேம், ஏப்ரல் 19

இஸ்ரவேலின் லிக்குட், தொழிற்கட்சி கூட்டரசு கவிழக் கூடிய அபாயக் கட்டமொன்றுக்கு தீர்வு காணப்பட்டுவிட்டது.

இவ்வாறு பிரதமர் ஷிமோன் பெரஸ் அமைச்சரவைக் கூட்டம் ஒன்றை அடுத்து அறிவித்துள்ளார்.

தொழிற்கட்சியைச் சேர்ந்தவரான பிரதமரின் பொருளாதாரக் கொள்கைளும் அவரது வெளிநாட்டுப் பயணங்களும் லிக்குட் கட்சிக்காரரான நிதியமைச்சரின் காரசாரமான விமர்சனத்துக்கு இலக்காகி மொடாயின் பகிரங்க விமர்சனங்களை அடுத்து நிதி அமைச்சர் பதவியில் இருந்தது.

இதை அடுத்து லிக்குட் கட்சியினரான நீதிஅமைச்சர் மோஷே நிஸிம் என்பவரும் நிதி அமைச்சர் யிட்ஸாக் மொடாய் என்பவரும் பரஸ்பரம் அமைச்சு மாற்றம் பெற்றுள்ளனர்.

நிதி அமைச்சர் பதவியிலிருந்து அவர் நீங்க வேண்டுமென்ற பிரதமர் பெரஸின் விருப்பத்தின் விளைவே இது என தெரிவிக்கப்பட்டது.

இருகட்சிக் கூட்டாட்சியின் பதவிக்காலம் வரை புதிய பதவிகளில் அவர்கள் இருக்கலாம் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

உடன்படிக்கையின்படி எதிர்வரும் நவம்பரில் பதவி மாறிய பின்னும் நிதி அமைச்சராக மொடாய் நியமிக்கப்படமாட்டார் என்ற உத்தரவாத கடிதம் ஒன்றையும் பிரதமர் பெரஸ் லிக்குட் கட்சித் தலைவரிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

இப்பொழுது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராக இருக்கும் யிட்ஸாக் ஸாமிர் லிக்குட் தலைவராவார்.

குலசேகர பாண்டியன் காலத்து கல்வெட்டு

சென்னை, ஏப்ரல் 19

அண்ணா மாவட்ட பழமதுரைப்பகுதியில் 700 ஆண்டுகளுக்கு முற்பட்ட கால கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மதுரையை ஆட்சி செய்த குலசேகர பாண்டியன் காலத்தைச் சேர்ந்தது இது என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதை பொருள் ஆராய்ச்சித்துறை அதிகாரி திரு. சுலைமான் தலைமையில் ஆய்வுவேலைகளில் ஈடுபட்ட குழுவே இதைக் கண்டுபிடித்துள்ளது.

அவாமிலீக் குற்றச்சாட்டு

டாக்கா, எப்ரல் 19

சுதந்திரமாக பங்களாதேஷ் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்ற தமது உறுதிமொழிக்கு மாறாக ஜனாதிபதி எர்ஷாட் நடந்து வருகிறார்.

இவ்வாறு பங்களாதேஷ் அவாமிலீக் அணியின் தலைவர் ஷேக் ஹசினா கண்டனம் தெரிவித்துள்ளார்.

டாக்காவில் பத்திரிகையாளர் மாநாடொன்றில் வைத்து மேற்கண்டவாறு கண்டித்துவிட்டு தொடர்ந்து பேசுகையில்;

ஜனாதிபதி எர்ஷாட் தான் விரும்பியபடி வெகுஜனத் தொடர்புச் சாதனங்களைத் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்துகிறார். -என்றார்.

உங்கள் வாழ்க்கையில் வெற்றி வரும்போது சாத்தான் வருகிறான்

ஞானக்கதிர்

உங்களுக்குச் சில வெற்றிகள், உயர்வுகள் வரும்பொழுது பிசாசு, "நீ திறமைசாலி, நீ எல்லாவற்றையும் செய்து விட முடியும். உனக்கு இயேசு தேவை இல்லை" என்பான்.

நீங்கள் வேதவசனத்திலும், விசுவாசத்திலும் அதிகமாய் முன்னேறும் பொழுது பிசாசு உங்களைக் கீழே தள்ள வகை செய்கிறான்

உங்கள் வெற்றிக்கு எதிராக அவன் போராடுகிறான்.

அவன் அழிப்பவன், கொலைகாரன், திருடன், வஞ்சகன்.

ஆனால் நம்முடைய நம்பிக்கையோ தேவன் மேலேயே இருக்கிறது. (நீதி 29 25, சங்40:4, ஏசா 57:13).

ஒரு மனிதன் மாதந்தோறும் 200ரூபா ஊதியம் பெற்று வந்தான்.

அதில் 20 ரூபாவை தசமபாகமாகவும், ஒன்றிரண்டு ரூபாய்களைக் காணிக்கையாகவும் கொடுத்து வந்தான்

ஏனெனில் மல்கியா 3:10,11 வசனங்களைக் குறித்த பிரசங்கங்களை அவன் கேட்டிருந்தான்.

தேவன் அவனை மிகவும் ஆசீர்வதித்தார். அவன் ஊதியம் உயர்ந்தது

அவன் கொடுத்ததினிமித்தம் பட்கிக்கிறவைகளை கர்த்தர் கண்டித்தார்.

வெகுவிரைவிலே அவன் 300,400 ரூபா ஊதியம் உயர்வுபெற்று முடிவாக மாதம் 1000ரூபா பெற்றான்.

அக்தருணத்தில் பிசாசு அவனிடம் வந்து, "நீ கஷ்டப்பட்டு உழைக்கிறாய். உனக்கும் தேவைகள் எவ்வளவோ இருக்கின்றன.

மாதம் 100ரூபா தசமபாகம் என்றால் வருடத்தில் 1200 ரூபா இவ்வளவு தொகையை கடந்த காலத்தில் கண்டதே இல்லை

எனவே நீ இதோடு தசமபாகம். காணிக்கையை நிறுத்தி விடு" என்று சொன்னான்.

அம்மனிதனும் யோசிக்கத் தொடங்கினான்.

முடிவில் தன் சபை ஊழியரிடம், "ஐயா, எனக்கு 100 ரூபா தசமபாகம் கொடுப்பது கடினமாயிருக்கிறது.

ஒரு சமயத்தில் என் மாதச் சம்பளமே 100 ரூபாதான். இப்பொழுதோ 100 ரூபாவைக் கொடுப்பது மனதிற்கு கஷ்டமாக இருக்கிறது இதற்கு ஒரு வழி சொல்லுங்கள்' என்றான்.

ஊழியர், 'சகோதரா, நீங்கள் கவலைப்படவேண்டாம். தேவன் சமாதானத்திற்குத் தேவன். நாம் ஜெபிப்போம்.

கர்த்தர் உங்களுடைய ஊதியத்தை முன்போலவே 200 ரூபாயாக மாற்ற ஜெபிப்போம்.

அப்பொழுது தசமபாகம் கொடுக்க சுலபமாக இருக்கும்' என்றார்.

அதைக்கேட்டதும் அம்மனிதன், 'ஐயா, எனக்குப் புத்தி வந்தது நான் இனிமேல் ஒழுங்காய் தேவனுக்குரியதைக் கொடுப்பேன்' என்று சொல்லிவிட்டுப் போனான்.

பிரியமானவர்களே, பிசாசு நம்மைச் சோதிக்க வருகிறான். தேவனுக்குக் கொடுப்பது எவ்வளவு மகிழ்ச்சியான காரியம்.

எவ்வளவு ரூபா ஊதியம் வந்தாலும் கவலை இல்லை

நாம் தேவனுடைய ஊழியத்திற்குக்கொடுக்க, கொடுக்க தேவன் நம்மை அதிகமாய் ஆசீர்வதிக்கிறார்.

நம்முடைய கனிகளைப் பட்சிக்கிறவைகளைக் கடிந்து கொள்கிறார்.

இயேசு நமக்கு முன்மாதிரி சோதனைக்காரன் வந்தபொழுது அவர் வசனத்தைக் கொண்டு ஜெயித்தார்.

'நாமும் அதேபோல் "சாத்தானே! இப்படி எழுதியிருக்கிறதே" என்று சொல்லி ஜெயிக்க முடியும்.

நாம் தேவனுக்குக் கொடுப்பதின் மூலம் நமது விசுவாசத்தை வெளியிட்டு தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறுகிறோம்.

வசனத்தைக் கொண்டு சாத்தானை ஜெயம் கொள்ளுங்கள்.

வசனம் எப்போதும் உங்கள் இருதயத்திலிருக்கும் படியாக, வேதத்தை அதிகமாய்த் தியானியுங்கள்.

நீங்கள் தேவனுடைய பிள்ளையாக மாறும்படியாக இயேசுவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்.

பரிசுத்த ஆவியின் அடையாளமாகிய அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்

அப்பொழுது பிசாசு உங்களைத் தொட முடியாது.

இயேசுகிறிஸ்து உங்களைத் தமது கரத்திற்குள் பாதுகாப்பாக வைத்துக் கொள்வார்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கல்வி டிப்ளோமா பயிற்சியில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ் பல்கலைக் கழகத்தின் 1985 ஆம் ஆண்டுக்குரிய கல்வி டிப்ளோமா பயிற்சியில் செல்வி இந்துமதி நடராஜா முதலாவதாக வந்தார்.

டிப்ளோமாப் பரீட்சையில் 5 அதிவிசேட சித்திகளை இவர் பெற்றார்.

பி எஸ்ஸி பட்டதாரியாக 1978 இல் சித்தி பெற்ற செல்வி இந்துமதி நடராஜா, திருகோணமலை இந்துக் கல்லூரி, கொழும்பு சென் கிளயர்ஸ் மகளிர் வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவியாவார்.

பலாலியை விட்டு வெளியேறியோருக்கு இலவச உணவுப்பொருள்

நல்லூர், ஏப் 20

கட்டுவன், மயிலிட்டி, பலாலி, வறுத்தலைவிளான் போன்ற பகுதிகளில் இருந்து வெளியேறிய பொதுமக்களுக்கு இரண்டு மாத காலத்திற்கு இலவச உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மயிலிட்டி பிரஜைகள் குழுவிடம் யாழ் அரச அதிபர் உறுதியளித்தார்.

மயிலிட்டி, வறுத்தலைவிளான், பலாலி பிரஜைகள் குழுக்களின் பிரதிநிதிகள் யாழ் அரச அதிபரைச் சந்தித்து இப்பகுதியில் ஏற்பட்ட இழப்புக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என கோரியிருந்தனர்.

அநேகமாக இம்மாத முடிவுக்கு முன்னர் இலவச உணவுப் பொருள் விநியோகம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய யோசனைகள் அரசமைப்பில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை

புதுடில்லி, ஏப் 19

புதிய யோசனைகள் இலங்கை அரசமைப்பில் எந்த அடிப்படை மாற்றத்தையும் ஏற்படுத்துவதாக அமையவில்லை

இப்படி பிரபல அரசியல் விமர்சகர் திரு ஜி. கே. ரெட்டி கூறியிருக்கின்றார்.

'இந்து'வில் வெளியான செய்திக் கட்டுரையில் திரு ரெட்டி மேலும் எழுதியிருப்பதாவது:-

காணிப்பங்கீடு, சட்டம், ஒழுங்கு, பராமரிப்பு ஆகியன குறித்து முரண்பாடுகள் நிலவுகின்றன.

அதிகாரப்பரவலாக்கல் பற்றிய சட்டவரையறை எந்த அமைப்புக்கு உட்பட்டது என்பது குறித்து இலங்கை முதலில் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ள வேண்டும் என்பதே இந்தியாவின் தற்போதைய நிலைமை.

வடக்கு, கிழக்கு இணைப்பு அல்லது ஏதாவது ஒரு விதமான இணைப்பு, பேச்சுவார்த்தைக்கு உரியதல்ல என்பதில் திரு. ஜெயவர்த்தனா பிடிவாதமாக இருக்கிறார்.

இணைப்பை ஒரு பக்கம் விட்டாலும் எந்த சட்ட அமைப்பின் கீழ் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்துவது பற்றிய விஷயத்தில் மீண்டும் ஏமாற்றப்பட இந்தியா தயாராக இல்லை.

பிரதமர் ராஜீவ்காந்தி, வெளிவிவகார அமைச்சர் பகத் இது விஷயத்தில் மிக எச்சரிக்கையாகவே நடந்துகொள்வர்.

அதனால் புது யோசனைகளை எழுத்துமூலம் பெறுவதில் இந்தியா அக்கறை காட்டியது.

இப்படி திரு. ரெட்டி எழுதுகிறார்

பிரதேச சபைகளுக்கு அக்டோபரில் தேர்தல்

கொழும்பு, ஏப். 20

240 பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் அக்டோபர் மாதத்தில் இடம் பெறும்.

பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாஸ இத்தகவலை தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் இத்தேர்தல்கள் நடைபெறும் மாநகரசபை, நகரசபைகளுக்குரிய தேர்தல்கள் நடைபெறமாட்டா—

இப்படி பிரதமர் அறிவித்தார்.

திருவிழா

வட்டுக்கோட்டை, ஏப். 20

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமியார் கோயில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இம்மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், 24 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

பொய்யாமொழி

குறள்:

கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

பொருள்:

சினம் தோன்றாமல் காத்துக் கல்வி கற்று, அடக்கமுடையவனாக இருக்க வல்லவனுடைய செவ்வியை, அறனுடைய வழியில் சென்று அறம் பார்த்திருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபால் மூலம் ஆங்கிலக் கல்வி

வெளிநாடு செல்வோர், உயர் கல்வி கற்பவர்கள், மாணவர்கள், இல்லத்தரசிகள் அனைவருக்கும் ஏற்றது இலவச விபரக் கொத்திற்கும் விண்ணப்பப் பத்திரத்திற்கும் தயவு செய்து எழுதவும்.

Cantabia Institute
21, MAIN STREET, JAFFNA,
Phone: 24201

உதயன்

20. 04. 1986 ஞாயிற்றுக்கிழமை

Computer
Programming
Weekend Classes
Commencement— 27 - 4 - 86
Cantabia Institute
(Pioneers in Computer Education)
21, MAIN STREET, JAFFNA.
T'Phone: 24201

வித்தாரம்

என்ன முரளியாரே! எங்கே போய் வாறீர்? ஏதாவது புதினம், கிதினம் இருக்கோ..? நாட்டு நடப்புகள் எப்பிடி?

என்னடா, நீ என்னிட்டை கேட்கவேண்டிய கேள்வியளை நான் உன்னிட்டை கேட்கிறேனே எண்டு நினைக்கிறியோ ...

நான் தான் என்னத்தைச் சொல்லலாம். யாழ்ப்பாணத்திலை இப்ப ஹர்த்தால் எண்டது சர்வ சாதாரணமாகி விட்டுது.

ஹர்த்தால் வேண்டாம் எண்டு நான் சொல்லயில்லை மக்களின்ரை எதிர்ப்பை — ஆட்சேபத்தை ஒருமித்து வெளிப்படுத்திறதுக்கு அது ஒரு நல்ல முறைதான்

ஆனால் இஞ்சை என்னடா எண்டால் எடுத்ததுக்கு எல்லாம் ஹர்த்தால், கடை அடைப்பு எண்ட நிலை வந்திட்டுது அதாலை பொதுசனத்துக்கு அதிலை வெறுப்பு வாற நிலையும் வந்திட்டுது

கட்டாயம் தேவைப்படுற ஒரு விஷயத்துக்கு ஹர்த்தாலை ஒழுங்கு பண்ணலாம். இரண்டு மூண்டு நாளைக்கு முன்னமே சனத்துக்கு அறிவித்தல் கொடுத்துச் செய்தா சனமும் தொலை தூரங்களிலை இருந்து வந்து திரும்பிப் போகவும் கஷ்டப்படவும் தேவையில்லை எல்லே.

எதுக்கும் ஒரு அளவு இருக்க வேணும். அளவுக்கு மிஞ்சினு அமுதமும் நஞ்சு ஆகச அருமைக்கு ஹர்த்தால் நடத்தினல் அதுக்கும் ஒரு மதிப்பு இருக்கும்.

நெடுகிலும் ஹர்த்தாலுகள் நடந்தால் எத்தினைபேருக்கு எவ்வளவு நட்டம் ...! மனித சக்தி எவ்வளவு வீணுய்ப் போகுது ..? பொருளாதாரக் கண்ணேடு பார்த்தால் எத்தினை பாதிப்பு!

திடீர் திடீர் எண்டு ஹர்த்தால்நடத்திறதுக்கு ஒருமுற்றுப்புள்ளி வைக்க வேணும்.

ஓர் இளம் தாய் தோளில் எடுக்குக் குழந்தை மூண்டு அல்லது நாலு வயதுப் பிள்ளையை நடப்பிச்சுக்கொண்டு மினிவானுக்கு- வெயிலுடன் சந்திக்கு அவசரம் அவசரமாய் வேர்த்து விறுவிறுக்கப் போகுது...

பிள்ளையளுக்குச் சுகமில்லையெண்டு ஆஸ்பத்திரிக்குக் காட்ட வந்ததாம். திடீர் ஹர்த்தால். கடையள் பூட்டு. பஸ் நிலையத்திலை வாகனங்கள் இல்லை எண்டதும் எப்பிடியும் வீட்டை போகவேணும் எண்ட அவசரத்திலை ஓட்டமும் நடையுமாய்ப் போகுது எவ்வளவு சிரமம், கஷ்டம் எல்லாம்

அதைப்பார்த்தனை வயசுபோனதுகள். ரவுனுக்கு வந்து கஷ்டப்பட்டுதுகள் அதுகளும் ஏதோ முக்கிய அலுவல் இல்லாமல் ஏன் ரவுனுக்கு வருதுதுகள் ...?

உந்த ஹர்த்தாலும் இப்ப சனத்துக்கு வரவரப் புளிச்சுக்கொண்டு போகுது தம்பி!.

கொண்டோடி

நோயாளர்கள் இரவு நேரம் செல்ல அச்சம்

கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு

கிளிநொச்சி, ஏப், 20 கிளிநொச்சி மாவட்ட ஆஸ்பத்திரிக்கு இரவு வேளை நோயாளர்கள் செல்ல அஞ்சுகின்றனர்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியின் ஓர் எல்லையாக பொலிஸ் — இராணுவம் கூட்டு முகாம் அமைந்திருப்பதே இதற்குக் காரணம்.

இதேவேளை ஆஸ்பத்திரி எல்லைக்குள் உள்ள விடுதிகளில் தங்கியிருக்கும் டாக்டர்கள் கூட இரவு வேளைகளில் ஆஸ்பத்திரியில் இருந்து வரும் அவசர அழைப்புகளுக்கு விடுதியிலிருந்து வெளியேறி சமுகமளிக்கவோ, சிற்றூழியர்கள் டாக்டர்களுக்கு அழைப்புக்களைக் கொண்டு செல்லவோ, இரவுக் காவலாளிகள் தமது கடமைகளைச் சீராக மேற்கொள்ளவோ முடியாத நிலை இங்குள்ளது

ஆஸ்பத்திரி ஊழியர்களும் வேறு இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றவண்ணம் உள்ளனர்

இதனல் இங்கு அச்சம் ஒருபுறம் உத்தியோகத்தர், ஊழியர்கள் பற்றாக்குறை மறுபுறம் உள்ளதால் இந்த ஆஸ்பத்திரியை நம்பியுள்ள பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் உயிர் நாடியாகவுள்ளது இந்த ஆஸ்பத்திரியின் சேவை ஒன்று மட்டும் என்பது குறிப்பிடத்தக்கது

டானியல் நினைவு தினக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப் 20 இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ்ப்பாணக் கிளை நடத்தும் டானியல் நினைவு தினக் கூட்டம் நல்லூர் இந்து விடுதியில் இன்று ஞாயிறு காலை 9 30 மணிக்கு நடைபெறும்.

நீர்வை பொன்னையன் தலைமை வகிப்பார்.

பிறந்த நாளும் ஞாபகார்த்த விழாவும்

யாழ்ப்பாணம், ஏப் 20 வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தினரால் டாக்டர் சாமுவல் ஹனிமனின் 231 ஆவது பிறந்த நாள் ஞாபகார்த்த விழாவும், வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தின் 27 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டமும் இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெறும்.

டாக்டர் ஆ. கிருஷ்ணசாமி தலைமை வகிப்பார்.

324 ஆசிரியர் யாழ்ப்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வெளி.

கே. பரமநாதன்-மூதூர் திருமதி. எஸ். தவராசா திருகோணமலை, திருமதி. கே சோமசுந்தரம்-குச்சவெளி, திருமதி. சி. ஏகாம்பரம் - திருகோணமலை, திருமதி. எஸ் சண்முகம் - திருகோணமலை.

கே. விஜயகுமார்- திருகோணமலை, திருமதி சி. ஐயாத்துரை - வெல்லாவெளி, ஆர். செல்லத்துரை - காத்தான்குடி, வி எஸ். ஜெயபாலன்-முறகட்டாஞ்சேனை, திருமதி. ஜி தம்பிப்பிள்ளை-வாழைச்சேனை.

திருமதி. எஸ் கந்தசாமி - முகமாலை, வி. சண்முகராசா - கிளிநொச்சி, திருமதி. என். சிவரத்தினம் -கிளிநொச்சி எம். எஸ். ஏ. பாரூக்-விநாயகபுரம், திருமதி. மி. சுந்தரமூர்த்தி- முல்லைத்தீவு

திருமதி. பி. மகாதேவன் - ஒட்டிசுட்டான், கே. தணிகாசலம் - முள்ளியவளை, எஸ். யோகராசா - மாங்குளம், கே. பத்மநாதன் - முல்லைத்தீவு, திருமதி. ஆர். சிவஞானநாதன் - முள்ளியவளை.

(நாளை தொடரும்)

சுவரைத் துளைத்த குண்டு தலையைத் தாக்கியது

கிளிநொச்சியில்

காயம் அடைந்தவர் தகவல்

நல்லூர் ஏப்ரல் 20 மறைந்திருந்த சிப்பாய்கள் எனது குடிசையை நோக்கி பொல்லுகளை வீசினர். அதன் பின்னர் எனது குடிசையை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர்

இதனல் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது.

கிளிநொச்சியைச் சேர்ந்த சந்தையா முத்தையா (40 வயது) என்பவர் யாழ். வைத்தியசாலையில் வைத்து மேற்கண்டவாறு தெரிவித்தார். வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் 4 ஆம் வாய்க்கால் உருத்திரன் வளவில் படுத்திருந்தபொழுது வீதியால் வந்த சிப்பாய்கள் இவரது குடிசையை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததனல் இவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது.

இவர் கிளிநொச்சி தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கத்தில் சீவல் தொழிலாளியாக கடமையாற்றுகிறார்,

இவருக்கு 4 பிள்ளைகள் உள்ளனர்.

தனக்கு நடந்த சம்பவம் பற்றி இவர் மேலும் சொன்னதாவது:-

வெள்ளிக்கிழமை இரவு பத்து மணியிருக்கும். உருத்திரன் வளவில் எனது குடிசையில் படுத்திருந்தேன்

நாய் குரைக்கும் சத்தம் கேட்டு தலையை நிமிர்த்தி வெளியே பார்த்தேன் அப்பொழுது சிப்பாய்களின் நடமாட்டம் வெளியே காணப்பட்டது.

சத்தம் போடாமல் திரும்பிப் படுத்து விட்டேன் பின்னர் எனது குடிசையை நோக்கி துப்பாக்கியால் சுடப்பட்டது.

இப்படி அவர் சொன்னர்:

சங்கர வைத்தியலிங்கனுர் காலமானுர்

வல்வெட்டித்துறை, ஏப்ரல் 20

வல்வை இயற்றமிழ் போதகாசிரியர் பண்டிதர் சங்கர—வைத்தியலிங்கனுர் காலமானுர்.

இறக்கும்போது இவருக்கு வயது 80.

வல்வையம்பதியின் இயற்றமிழ் புலவர், யாப்பிலக்கண வித்தகர் என பல அறிஞர்களாலும், நாவலர் பெருமானுராலும் பெரிதும் விரும்பிப் பாராட்டப்பட்ட வைத்தியலிங்கனுரின் பேரன் இவர்.

அன்னாரின் பூதவுடல் வல்லை ஊறணி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது

புராணங்களுக்கு விரிவுரைகள் செய்தும் புராண படனங்களுக்கு பயன் சொல்லியும் திருவாசகம், திருமுறைகளை பண்ணேடு ஓதியும் இப்பகுதி வாழ் மக்கள் மனதில பண்டிதர் ஐயா என்று சொல்லுமளவுக்கு நீங்காத இடம் பிடித்திருந்தார் இவர்.

வெடிச்சத்தம் கேட்டபோது புகைமண்டலம் கிளம்பியது

முதலிக்குளம் சம்பவத்தில் தப்பிய சாரதி தகவல்

திருகோணமலை, ஏப். 20 ஒரு வளையில் முதல் ஜீப் திரும்பியதும் திடீரென்று சத்தம் கேட்டது. புகை மண்டலம் எழும்பியது.

திருகோணமலை முதலிக்குளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிலக்கண்ணி வெடியின் போது 6 சிப்பாய்கள் பலியானர்கள்.

சம்பவத்தில் உயிர்தப்பிய விமானப்படை சாரதியான ரஞ்சித் பியசிறி கொட்ட கொட தமது சாட்சியத்தில் இப்படிச் சொன்னர்.

திருகோணமலை பதில் நீதிவான் திரு எம் கே. செல்வராசா இறந்த சிப்பாய்களின் மரண விசாரணையை நடத்தினர்.

தாக்குதலில் இருந்து உயிர் தப்பிய விமானப் படைச் சாரதியான ரஞ்சித் பியசிறி கொட்ட கொட தமது சாட்சியத்தில் சொன்னதாவது:-

முதலிக்குளத்தில் உள்ள விமானப்படை முகாமில் இருந்து இறந்தவர்கள் கட்டுநாயக்கா செல்வதற்காக ஜீப் ஒன்றில் புறப்பட்டனர்.

அதற்குப் பாதுகாப்பாக இன்னும் ஒரு ஜீப் 5 சிப்பாய்களுடன் புறப்பட்டது இரண்டாவது ஜீப்பை நான் செலுத்தினேன்.

மதகு ஒன்றை அண்மித்ததும் ஜீப்கள் நிறுத்தப்பட்டன. நிலக்கண்ணி வெடி புதைக்கப்பட்டுள்ளதா என்று மதகு சோதனை இடப்பட்டது. நிலக்கண்ணி வெடி எதுவும் அகப்படவில்லை. அதைத் தொடர்ந்து பிரயாணம் தொடர்ந்தது

ஒருவளைவில் முதல் ஜீப் திரும்பியது திடீரென்று வெடிச்சத்தம் கேட்டது. புகைமண்டலம் எழும்பியது.

எனது ஜீப்பை 100 யார் தூரம் பின்னேக்கிச் செலுத்தினேன். எனது ஜீப்பில் இருந்த சிப்பாய்கள் நிலத்தில் படுத்துக் கொண்டு சுட்டனர்.

சிறிது நேரம் சென்ற பின்னர் புகைமண்டலம் எழும்பிய இடத்துக்குச் சென்றேன் ஜீப் சிதறிக் கிடந்தது. பெர்ணண்டோ என்பவர் எழும்பிக் கையை அசைத்துக் காட்டினர். பின்னர் கீழே விழுந்து மரணமானர்.

நிலக்கண்ணி வெடித்த இடத்தில் கிணறு அளவில் குழி ஒன்று ஏற்பட்டு இருந்தது

இப்படி சாட்சி சொன்னர்.

[illegible] சம்பவங்கள் என்று பதில் நீதிவான் தீர்ப்பளித்தார்.

31 ஆம் நாள் நினைவஞ்சலி

பெ. பிரான்சிஸ்
பிறப்பு: 1954-01-12

பி. ஜூலியானு கிறேஸ்
பிறப்பு: 1958-06-19

இறப்பு:
1986 - 03 - 21

இவர்களின் ஆத்ம சாந்திக்காக 21-04-86 திங்கட்கிழமை காலை 6 30 மணிக்கு இரணைப்பாலை புனித பற்றிமா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

திரு திருமதி ம. செபமாலை
அக்கா, தங்கைமார், தம்பிமார்,
அண்ணன், அண்ணி, மருமக்கள்,
உற்றார், உறவினர்.

விளையாட்டரங்கு

ஜொனியன்ஸ் வெற்றி

மகிந்தா அபார ஆட்டம்

— விளையாட்டுச் செய்தியாளர்: சண் ஜோண்சன் —

யாழ்ப்பாணம், ஏப். 20 வியாழன் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் அணி வெற்றி பெற்றது.

இந்த அணி வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் அணியை 101 ஓட்டங்களால் தோற்கடித்தது.

ஜொனியன்ஸ் அணி வீரர் ஆர். மகிந்தா விளாசியடித்த 46 ஓட்டங்களும் – 3.5 ஓவர்களில் 5 ஓட்டங்களை மட்டும் கொடுத்து அவர் வீழ்த்திய 5 விக்கெட்டுக்களும் - அவரது அணியின் வெற்றிக்கு வித்திட்டன.

வட்டுக்கோட்டை 'பிக் நெல்' விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஜொனியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்த அணி ஒதுக்கப்பட்ட 40 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது

என். ராஜ்குமார், வை. முரளிதரன், ஆர். மகிந்தா ஆகியோர் முறையே 24, 23, 46, ஓட்டங்களையும் எஸ். டி, குலநாதன் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

யேசுராசா, ஞானதிலகன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், நித்தியராஜா, அகஸ்ரின், ராகவன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய ஓல்ட் கோல்ஸ் அணி 29. 5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 102 ஓட்டங்களை மட்டும் பெற்றது

ராகவன் 48 ஓட்டங்களையும் சண்முகரத்தினம் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஓஸ்ட்ரல் - ஏசியா

கிண்ணம் பாகிஸ்தானுக்கு

ஷார்ஜா, ஏப்ரல் 19 ஓஸ்ட்ரல் - ஏசியா வெற்றிக் கிண்ணத்தை பாகிஸ்தான் அணி தட்டிச் சென்றது.

நேற்று முன் தினம் நடைபெற்ற இறுதி மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் சர்வதேச கிரிக்கெட் போட்டியில்பாகிஸ்தான் அணி இந்திய அணியை ஒரு விக்கெட்டால்தோற்கடித்தது.

பாகிஸ்தான் அணியின் உபதலைவர் யாவித் மியண்டாட் விறுவிறுப்பாக எடுத்த 114 ஓட்டங்களும், இறுதிப் பந்தில் அவர் எடுத்த 6 ஓட்டங்களும் இந்த அணியின் வெற்றியை உறுதி செய்தன.

ஷார்ஜாவில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்த அணி தனக்கு ஒதுக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய அணியின் 245 ஓட்டங்களுக்கு பதிலளிக்கும் வகையில் ஆடத் தொடங்கிய பாகிஸ்தான் அணியின் வேகம் ஆரம்பத்தில் சிறப்பாக இருக்கவில்லை.

ஆட்டத்தின் இறுதிப் பந்துவீச்சில் 4 ஓட்டங்களைப் பெற்றால் மட்டுமே பாகிஸ்தான் அணிக்கு வெற்றி என்ற நிலைமையில் அந்த பந்தை மியண்டாட் சிக்சராக அடித்து பாகிஸ்தான் அணியை வெற்றிக்களிப்பில் ஆழ்த்தினர்.

50 ஓவர்களில் பாக்கிஸ்தான் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றது.

பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு வகைசெய்த 114 ஓட்டங்களைப்பெற்ற யாவித் மியண்டாட் இந்த ஆட்டத்தின் சிறப்பு ஆட்டக்காரராக தெரிவு செய்யப்பட்டார்.

யூனியன் அணி வெற்றி!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20 மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் யூனியன் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது

இந்த அணி தனக்கு ஒதுக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ் இரமணன், எஸ் சுதன், எம். சதானந்தன் ஆகியோர் முறையே 22, 18, 17 ஓட்டங்களைப் பெற்றனர்

ஜெயகுமார், தாஸன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 43 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ் வீரசிங்கம் சிறப்பாக ஆடி 61 ஓட்டங்களைப் பெற்றார்

கேதீசன், பொன்பிலியன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

எங்கள் தேவை

ஸ்ருடியோ தொழில்

பழகிய - பழகுபவர் விண்ணப்பிக்கவும். தொடர்பு கொள்ளவும்; ஸ்ருடியோ நித்யசித்ரா, சங்கானை

ஸ்ருடியோ விற்பனைக்கு

ஸ்ருடியோ விற்பனைக்குண்டு (மன்னுர்). தொடர்பு கொள்ளவும்; ஸ்ருடியோ நித்யசித்ரா, சங்கானை.

உங்கள் உற்பத்திப் பொருட்களை இருபத்துநான்கு மணி நேரத்தில் விநியோகிக்க வேண்டுமா?

எமது நிறுவனத்தின் விநியோகப் பிரிவில் கடமையாற்றும் சுமார் 60 பெண்கள் தினசரி ஒவ்வொரு வாடிக்கையாளர்கள் இல்லம் சென்று உற்பத்திப் பொருட்களை விநியோகம் செய்து வருகின்றுர்கள். இன்று பல நிறுவனங்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களை எங்கள் விற்பனைப் பிரிவின் மூலம் விநியோகம் செய்து நன்மை அடைந்துள்ளார்கள். நீங்களும் உங்கள் பொருட்களை விநியோகம் செய்ய உடன் தொடர்புகொள்ளவும்.

ரொப்பலர் இன்ரநஷனல்
95, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தோலகட்டி
அறிவித்தல்

வியாபாரிகளுக்கும் பாவனையாளருக்கும்
ஓர் முக்கிய அறிவித்தல்
நெல்லி ரசம்-முந்திரிகை ரசம்

மீண்டும் பாவனையாளர்கள், வியாபாரிகள் அனைவருக்கும் அன்புடன் வலியுறுத்துகின்றேம் எமது பெயர் கொண்ட போலி லேபல்கள் மீண்டும் யாழ் நகரிலும் வெளியிடங்களிலும் தலைகாட்டத் தொடங்கியுள்ளன என்பதை எமது பிரதிநிதிகள் தகுந்த ஆதாரத்துடன் எமது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். ஆகவே தற்போது உள்ள சூழ்நிலையில் போலிகளுக்கும் ஏமாற்றும் பேர்வழிகளுக்கும் மிகவும் ஆபத்தான காலம் என்பதை நினைவில் கொண்டு மிக எச்சரிக்கையாக எமது லேபல்களில் போலிகளை வாங்க வேண்டாமென தாழ்மையுடன் வியாபாரிகளைக் கேட்டுக்கொள்கின்றேம்.

முக்கிய கவனிப்பு:--

எமது லேபல்களில் மணிக்கூட்டுக் கோபுரம் உண்டு. அதில் நேரம் 6. 20 மணியைக் காட்டுகின்றது (லேபல்களை உன்னிப்பாகக் கவனிக்க).

மேலும் விபரங்களுக்கு:—

ஜோ. எகட்டன் (செனித் மார்கட்டிங்) யாழ்நகர்.

பணிப்பாளர் செபமாலை தாசர் சபை தோலகட்டி, வயாவிளான்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: [illegible] லிமிட்டெட், 807, [illegible] யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் [illegible]
வெளியிட்ட திகதி 20-04-1986
Registered as a Newspaper [illegible]
[illegible]